1st March 1958]

Dalmia Cement, Limited.

* 155 *Q.*—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the number of employees working in the Dalmia Cement, Limited, Dalmiapuram;

(*b*) the number of employees among them, provided with residential quarters; and

(*c*) whether the management has sought the aid of the Government for housing employees under the Subsidized Industrial Housing Scheme provided for in the Second Five-Year Plan?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) 2,684.

(*b*) 1,019.

(*c*) Yes.

SRI S. LAZAR : ஸார், எல்லா தொழிலாளர்களுக்கும் வீடு கொடுக்கும்படியாக சர்க்கார் உத்தர விட்டிருக்கிறதா ? அதிலும் குறிப்பாக சிமிண்ட் உற்பத்தி சாலையில் வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கு வீடு கொடுக்கப்படும் என்று ஏதாவது அறிவிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : சாதாரணமாக மற்ற தொழிலாளர்களுக்கு கொடுத்திருக்கின்ற வீடுகளை விட அதிக சதவிகிதம் டால்மியாபுரம் சிமிண்ட் தொழிலாளர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. குறைந்தபட்சம் 40 சதவிகிதம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதைவிட வேறு எந்தவிதமான உத்தரவும் பிறப்பிக்கவில்லை.

SRI T. T. DANIEL : May I know from the Hon. Minister whether the power to allot these houses vests with the Government or the Management and on what basis they are allotted?

THE HON. SRI R. VENKATARAMAN : The power to allot these houses is vested in a Committee to be constituted and there will be in it representatives of both the employers and the employees.

SRI S. LAZAR : இந்த கமிட்டி இருப்பதாக சொல்லக்கூடிய நேரத்தில் சிமிண்ட் தொழிற்சாலையில் வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக்கொடுப்பதற்கு சர்க்காரிலிருந்து உதவி பெறுவதற்கு இந்த கமிட்டி வேலை செய்து வருகிறதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : ஸார், ஸப்ஸிடைஸ்ட் இண்டஸ்ட்ரியல் ஹவுசிங் ஸ்கீம் சர்க்காரால் போடப்பட்டு வீடுகளை கொடுப்பதற்கு வேலை செய்து வருகிறது.

SRI A. V. P. ASAITHAMBI : ஸார், 2,684 பேர்கள் சிமிண்ட் தொழிற்சாலையில் வேலைசெய்து வருவதாக தெரிவிக்கப்பட்டது. அதில் வட இந்தியர்கள் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள் என்பதை தெரிவிக்க முடியுமா என்று கேட்கவிரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : இதற்கென்று தனிக்கேள்வி போட்டால் பதில் தெரிவிக்கிறேன்.

Sri S. NAGARAJA MONIGAR : வட இந்தியர்கள் தென் இந்தியர்கள் என்று இரு பிரிவாகப் பேசப்பட்டு வருகிறதே, இம்மாதிரி தனித்தனி பிரிவினை உண்டா ? இந்த பிரிவினைக்கு தனியாக ஏதாவது லட்சணங்களும் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri R. VENKATARAMAN : இவ்விதம் பிரிவினையை குறிப்பிடுகிற கனம் அங்கத்தினருக்கு "உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுக" என்ற கோரிக்கை தெரிந்திருக்காது என்று நம்புகிறேன்.

Sri M. KALYANASUNDARAM : சர்க்கார் உதவி பெற்று கட்டப்பட்டிருக்கும் வீடுகளுக்கு எந்த விதத்தில் வாடகை வசூலிக்கப்பட்டு வருகிறது ? குறிப்பாக சில காலங்களுக்குப் பின்னால் அந்த வீடு தொழிலாளர்களுக்கு சொந்தமாக்கப்படுமா ?

The Hon. Sri R. VENKATARAMAN : ஸப்ஸிடைஸ்ட் இண்டஸ்ட்ரியல் ஹவுஸிங் ஸ்கீமில் கொடுக்கப்படுகிற வீடுகள் சொந்தமாகாது. தொழிலாளர்கள் வீடுகளை கூட்டுறவு முறையில் கட்டிக்கொள்ளவேண்டும்.

Sri A. GOVINDASAMY : இந்த மான்யம் மத்திய சர்க்காரால் அளிக்கப்பட்டு வருகிறதா அல்லது ராஜ்ய சர்க்காரால் அளிக்கப்பட்டு வருகிறதா ?

The Hon. Sri R. VENKATARAMAN : இதில் ஒரு பகுதி மத்திய சர்க்காரும் ஒரு பகுதி ராஜ்ய சர்க்காரும் இன்னொரு பகுதி முதலாளிகளும் போடுகிறார்கள்.

Sri S. PAKKIRISAMI PILLAI : இந்த தொழிலாளர்கள் ராஜ்ய சர்க்காரிடமிருந்து உதவியை கோரியதாக சொல்லியிருக்கிறார்கள். இதற்காக ராஜ்ய சர்க்கார் எந்தெந்த இடத்தில் எவ்வளவு பணம் ஒதுக்கி வைத்திருக்கிறார்கள் என்று தெரிவிக்க முடியுமா ?

The Hon. Sri R. VENKATARAMAN : ஸார், ஸப்ஸிடைஸ்ட் இண்டஸ்ட்ரியல் ஹவுஸிங் ஸ்கீமின் கீழ் முதலாளிகள் கட்டலாம், சர்க்கார் கட்டலாம், தொழிலாளர் கூட்டுறவு முறையில் கட்டலாம். கனம் அங்கத்தினர் அவர்கள் தொழிலாளர்கள் கூட்டுறவு முறையில் கட்டுவதைப்பற்றி கேட்கிறார்கள் என்று நினைக்கிறேன். தொழிலாளர்கள் கூட்டுறவு முறையில் கட்டும்பொழுது சர்க்கார் ஸப்ஸிடியாக, 25 சதமானம் கொடுக்கிறது, 50 சதமானம் கடனாக கொடுக்கிறது, பாக்கி 25 சதமானம் தொழிலாளர்களாக போட வேண்டும். இந்த வீட்டுக்கு வாடகை $12\frac{1}{2}$ ரூபாய்.

Sri S. LAZAR : Is there any proposal to provide houses to all the labourers working not only in this particular factory, but all the factories in this State?

The Hon. Sri R. VENKATARAMAN : There is no proposal, but that is our ideal.

Sri M. P. SUBRAMANIAM : ஸார், தொழிலாளர்களுடைய குடியிருப்பு வசதிக்காக மத்திய அரசாங்கத்திலிருந்து பெறப்படும் உதவியை பூராவும் மாகாண அரசாங்கம் பயன்படுத்தவில்லை என்று சொல்லப்படுகிற குற்றச்சாட்டு உண்மையா ?

The Hon. Sri R. VENKATARAMAN : இதைக் குறித்து மான்யக் கோரிக்கை வரும்பொழுது இந்த விபரங்களை கொடுக்கிறேன்.